# மதுரை மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளையின்
# 2017-2018-ம் நிதி ஆண்டு அறிக்கை

**(Annual Report)**

அரசாணை (எம்.எஸ்) எண்.57, தொழில் (எம்.எம்.டி.1) துறை, நாள்.19.05.2017, அரசாணை (எம்.எஸ்) எண்.90, தொழில் (எம்.எம்.டி.1) துறை, நாள்.27.07.2017 மற்றும் அரசாணை (எம்.எஸ்) எண்.81, தொழில் (எம்.எம்.டி.1) துறை, நாள்.14.08.2018-ன்படி உருவாக்கப்பட்ட தமிழ்நாடு மாவட்ட கனிம கட்டமைப்பு விதிகள் 2017-ன்படி மதுரை மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணைகள் ந.க. எண்.764/2017-கனிமம், நாள்.12.09.2017-ன்படி மதுரை மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளையானது கீழ்க்குறிப்பிட்டுள்ள அலுவலர்களை உறுப்பினர்களாகக் கொண்டு உருவாக்கப்பட்டு, இவ்வறக்கட்டளையானது ஆவண எண்.119/2017/BK4, நாள்.21.09.2017-ன்படி தல்லாகுளம் சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | நிர்வாகக் குழு அமைப்பு | வ. எண் | மேலாண்மைக் குழு அமைப்பு |
|---|---|---|---|
| 1. | மாவட்ட ஆட்சியர், மதுரை | 1. | மாவட்ட ஆட்சியர், மதுரை |
| 2. | மாவட்ட வருவாய் அலுவலர், மதுரை | 2. | மாவட்ட வருவாய் அலுவலர், மதுரை |
| 3. | துணை இயக்குநர், புவியியல் மற்றும் சுரங்கத்துறை, மதுரை. | 3. | துணை இயக்குநர், புவியியல் மற்றும் சுரங்கத்துறை, மதுரை. |
| 4. | திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, மதுரை | 4. | திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, மதுரை |
| 5. | துணை இயக்குநர், (சுகாதாரம்), மதுரை | 5. | மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர், (வளர்ச்சி), மதுரை |
| 6. | முதன்மைக் கல்வி அலுவலர், மதுரை | 6. | உதவி இயக்குநர் (பஞ்சாயத்து), மதுரை |
| 7. | மாவட்ட கருவூல அலுவலர், மதுரை | 7. | மாவட்ட ஆதி திராவிட நல அலுவலர், மதுரை |
| 8. | மாவட்ட சமூக நல அலுவலர், மதுரை | 8. | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம், மதுரை |
| 9. | உதவி இயக்குநர் (பஞ்சாயத்து), மதுரை | 9. | மாவட்ட வன அலுவலர், மதுரை |
| 10. | திரு. எ. ரவீந்திரன், எண். 30, சங்கர்நகர் 3வது தெரு, கோ.புதூர், மதுரை (அரசு சாரா அலுவலர்) | 10. | முதன்மைப் பொறியாளர், பொ.ப.து, நீ.ஆ.அ, மதுரை |

| | | | |
|---|---|---|---|
| 11. | திரு. எஸ்.எல். சொக்கலிங்கம், கூடுதல் இயக்குநர், (ஓய்வு), புவியியல் மற்றும் சுரங்கத்துறை, சென்னை | 11. | உதவி இயக்குநர், நில அளவை, மதுரை |
| | | 12. | மாவட்ட கருவூல அலுவலர், மதுரை |
| | | 13. | மாவட்ட சமூக நல அலுவலர், மதுரை |
| | | 14. | துணை இயக்குநர், (சுகாதாரம்), மதுரை |
| | | 15. | இணை இயக்குநர், (வேளாண்மை), மதுரை |
| | | 16. | தொழிலாளர் ஆய்வாளர், மதுரை |

மதுரை மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளைக்காக, பாரத ஸ்டேட் வங்கி, வணிகவரி அலுவலக கிளையில் ஒரு வங்கிக் கணக்கு (கணக்கு எண். 37193268816) துவக்கப்பட்டு சிறு மற்றும் பெருங்கனிமங்களுக்கான உரிமக் கட்டணத்தின் அடிப்படையில் உரிய விதிகளின்படி மாவட்ட கனிம கட்டமைப்பிற்கான நிதி வசூலிக்கப்பட்டு வருகிறது.

மதுரை மாவட்டத்தில் 16 பெருங்கனிம சுரங்கக் குத்தகை உரிமங்களும் 88 சிறு கனிம குவாரி (105 கிரானைட் குவாரிகள் நீங்கலாக) குத்தகை உரிமங்களும் நடப்பிலுள்ளன. நடப்பிலுள்ள 16 பெருங்கனிம உரிமங்களும் மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்தின் இசைவு பெற்று சமர்ப்பிக்காத காரணத்தினாலும், வேறு சில காரணங்களுக்காகவும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. மேலும் நடப்பிலுள்ள 88 சிறு கனிம குவாரி குத்தகை உரிமங்களில் 6 குவாரி குத்தகை உரிமங்களுக்கு உரிமக் கட்டணத்தில் 30% தொகையும், மீதமுள்ள 82 குவாரி குத்தகை உரிமங்களுக்கு உரிமக் கட்டணத்தில் 10% தொகையும் கனிம அறக்கட்டளை நிதியாக வசூல் செய்யப்பட்டு வருகிறது.

மதுரை மாவட்டத்தில் 111 கிராம ஊராட்சிகள் சுரங்கப்பணிகளால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளாக கண்டறியப்பட்டுள்ளன.

மதுரை மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளை நிதியாக 31.03.2018-வரை ரூ.86,88,191/- (ரூபாய் எண்பத்து ஆறு லட்சத்து எண்பத்து எட்டாயிரத்து நூற்று தொன்னூற்று ஒன்று மட்டும்) வசூலிக்கப்பட்டு அறக்கட்டளை வங்கிக்கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது.

2017-18 ஆம் நிதியாண்டில் மதுரை மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளை மூலமாக எந்தத் திட்டங்களுக்கும் நிர்வாக ஒப்புதல் ஏதும் வழங்கப்படவில்லை.

மேலும் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை மேல்முறையீட்டு வழக்கு எண். W.A.(MD)No.972/2017, நாள். 29.08.2017-ன்படி திருமதி.ஆவணம்மாள் (லேட்) என்பவரின் கணவர் திரு.சேகர் என்பவருக்கு இழப்பீட்டு தொகையாக **ரூ.5,00,000/- (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்)** வழங்க அரசுக்கு உத்தரவிடப்பட்டுள்ளதை தொடர்ந்து மேற்படி தொகையினை மதுரை மாவட்ட கனிம அறக்கட்டளை நிதியிலிருந்து வழங்கப்பட்டுள்ளது. மேற்படி தொகையினை குவாரி குத்தகைதாரர் திரு.இராதாகிருஷ்ணன் என்பவரிடமிருந்து வசூல் செய்ய வருவாய் வசூல் சட்டத்தின்படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவ்வறிக்கையானது மதுரை மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளையின் மேலாண்மை மற்றும் நிர்வாக குழு முன்பு சமர்ப்பிக்கப்பட்டு ஒப்புதல் செய்யப்பட்டது.

தலைவர், மதுரை மாவட்ட கனிம கட்டமைப்பு
அறக்கட்டளை / மாவட்ட ஆட்சித்தலைவர்,
மதுரை.